# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2003 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சிச் சபை (திருத்தச்) சட்டம்

*(2003 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2003, ஒற்றோபர் மாதம் 17 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 6.25** **தபாற் செலவு : ரூபா 4.50**

## 2003 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சிச் சபை (திருத்தச்) சட்டம்

[2003 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது]

ச.வ–ஓ 16/99
4554

### 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சிச் சபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

**1.** இச்சட்டம் 2003 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சிச் சபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படக்கூடிய வாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்கச் சட்டத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சிச் சபைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு, அப்பிரிவின் முடிவில் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

“(ஊ) தேயிலை ஆராய்ச்சியில் முதலீட்டை ஊக்குவித்தலும்;

(எ) தேயிலைக் கைத்தொழில் மீதான தரவுகளைச் சேகரித்தலையும் பரப்புதலையும் பொறுப்பேற்றலும், தேயிலைக் கைத்தொழிலின் அபிவிருத்தி வாய்ப்புகளை நிச்சயப்படுத்துவதற்கு ஆராய்ச்சியை நடாத்துதலும் ;

(ஏ) தேயிலைக் கைத்தொழில் தொடர்பாகத் தோதான கொள்கைகள் பற்றி அமைச்சருக்கு மதியுரை வழங்குதலும் இயைபான முகவராண்மைகளுடன் இணைந்து செயலாற்றுதலும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு, அதன் (1) ஆம், (2) ஆம் உட்பிரிவுகளை நீக்கஞ் செய்துவிட்டு அவற்றிற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :–

2 –H 019150 – 1,250 (2003/07)

"(1) சபையானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) சபையின் பதவிவழி உறுப்பினராக இருக்க வேண்டிய தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் ;

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்பட்டவர்களான பின்வரும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட ஆட்கள், அதாவது —

(i) தேசிய அரசுப் பேரவையின் 1975 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட தேயிலைச் சிறு பற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகார சபையின் பிரதிநிதியொருவர் அவ் அதிகாரசபையினால் பெயர்குறித்து நியமிக்கப்படுவார் ;

(ii) (291 ஆம் அத்தியாயமான) இலங்கைத் தோட்டத் துரைமார் சங்கக் கட்டளைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தோட்டத்துரைமார் சங்கங்கத்தின் பிரதிநிதியொருவர், இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோசனையுடன் அச்சங்கத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படுவார் ;

(iii) பெருந்தோட்ட கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான, அவ்வமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதியொருவர்;

(iv) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர்

குறித்து நியமிக்கப்பட்டவரான அவ் அமைச்சரின் அமைச்சுப் பிரதிநிதி யொருவர் ;

(v) கமத்தொழிற்றுறையில் போதியளவு அறிவும் ஆராய்ச்சி மற்றும் அபி விருத்தி அனுபமும் கொண்ட ஆட்க ளிடையேயிருந்து பெருந்தோட்டக் கைத்தொழில் என்னும் விடயத்திற் குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சின் பெயர்குறித்து நியமிக்கப் பட்ட இரண்டு உறுப்பினர்கள் ;

(vi) பெருந்தோட்டக் கைத்தொழில்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப் பான அமைச்சரால், தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய கட்டளைக்கல் மீது தெரிவு செய்யப்பட வேண்டிய தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஈருறுப்பி னர்கள் ;

இவ்வுட்பந்தியின் நோக்கத்துக்காக "தொழிற்சங்கம்" என்பது தொழிற் சங்கக் கட்டளைச் சட்டத்தில் (அத்தி யாயம் 138) உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(vii) இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோசனையுடன் தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபி விருத்திச் சங்கங்களின் சம்மேளனத் தால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் ;

(viii) இலங்கைத் தேயிலைச் சங்கத்தின் (இ.தே.ச.) கலந்தாலோசனையுடன் தனியார் தேயிலைத் தொழிற்சாலை

உரிமையாளர் சங்கத்தால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்.

(2) அமைச்சர், சபை உறுப்பினர்களுள் ஒருவரைச் சபையின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு அதன் 5 ஆம் பந்தியில் "ஐந்து உறுப்பினர்கள்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆறு உறுப்பினர்கள்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, "பிரிவு 7(1) (அ) (i) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவரான தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளரானவர்–" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பிரிவு 7 இன் (1) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டவரான தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளரானவர் நிறுவகத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராக இருத்தல் வேண்டும் என்பதுடன்–" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*நிலை பெயர்கால ஏற்பாடு.*

**6.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவி வகித்துவரும் சபையின் உறுப்பினர்கள், இச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவின்கீழ்ச் சபையானது மீள அமைத்துருவாக்கப்படும் வரையில் தொடர்ந்தும் அத்தகைய பதவியை வகித்து வருதல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**7.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்